


இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 09.09.2024 அன்று மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடனுதவிகள் வழங்கும் விழாவை மதுரை மாவட்டத்தில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி கலையரங்கில் நடைபெற்ற விழா நிகழ்வில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள் 1189 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூபாய் 100.54 கோடி மதிப்பீட்டில் கடனுதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், வணக்கத்திற்குரிய மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், செ.ஸ்டாலின்குமார், மு.பழனியாண்டி, மாநகராட்சி ஆணையர் சரவணன், உதவி ஆட்சியர் (பயிற்சி) அமித்குப்தா, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) மரு.சு.சுரேஷ், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டம்

## ஆண்டிமடம் தெற்கு ஒன்றியப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்புரையாற்றினார்!

அரியலூர், செப்.12-

அரியலூர் மாவட்டம் ஆண்டிமடம் தெற்கு ஒன்றியத்தில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி,

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் தெற்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டம், காட்டாத்தூர் கிராமம் சுவாதி திருமண மண்டபத்தில், ஒன்றிய அவைத் தலைவர் கா.பாலு தலைமையில், ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.கலிய பெருமாள் வரவேற்புரையில் நடைபெற்ற கூட்டத்தில், அரியலூர் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர்,

கழக சட்டத்திட்ட திருத்த குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், க.சொ.க.கண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

ஒன்றிய பொருளாளர் கிரேஸ்.சுப்ரமணியன்,அன்பழகி முத்துகுமரன், பொ.கென்னடி, பி.கே.சஞ்சீவிகுமார், பெ.தனசேகரன், இள.சிவமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட அணி அமைப்பாளர்கள் அமைப்பாளர் க.தர்மதுரை, கே.சி. லூயிகதிரவன், இ.பி.ஆர். செந்தில்குமார், பானுமதி இராஜேந்திரன், ஊராட்சி மன்ற தலைவர் விசாலாட்சி சிவக்குமார், ஊராட்சி மன்ற தலைவர் டேவிட், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் கே.சி.தங்கராசு, சி.ராணி, பால்அருள்தாஸ், க.பாலமுருகன், டி.எம்.டி.அறிவழகன், சா.சேகர், க.இளவரசன், கழக வழக்கறிஞர் செல்ல.மணிமாறன், கா.அறிவழகன், மு.க.கருணாநிதி, இராமலிங்கம், தமிழ்அழகி, வீரனார். இராஜேந்திரன், ஆர்.ஜெயபால், க.ராஜேந்திரன், முடியரசி மாரிமுத்து, சுந்தரவடிவேல், பாக்கியராஜ், ஒன்றிய கவுன்சிலர்கள் பூங்கோதை தன்ராஜ், சரோஜா காமராஜ், செந்தில்குமார், ராஜசேகர், செ.பிரதீப், செந்தமிழ்செல்வன், சா.சின்னப்பன், விஜயகாந்த், சா. ரமேஷ், கமலாதேவி, இராமு, சின்னதுரை, இராஜவன்னியன், இராசேந்திரன், இந்திராணி, திலகவதி, மணி, செந்தில், சிலம்பரசன், ரமேஷ், ஜான்போஸ்கோ

மற்றும் மாவட்ட,ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இறுதியாக ஒன்றிய துணை செயலாளர் இ.பி. ஆர். செந்தில்குமார் நன்றி கூறினார்.

---

### செப்.15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா! புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

## புதுக்கோட்டையில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை! திரளாக பங்கேற்பீர்!

### மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!

புதுக்கோட்டை, செப்.12-

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:



காஞ்சி தந்த காவியத் தலைவர் உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ் மொழி உயர்வுக்காகவும் . தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ் நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை , கண்ணியம் , கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் “ இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு , நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் “மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயரை தமிழ்நாடு” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் சுயமரியாதை சுடரொளி சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் எழுத்து வேந்தர் தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 116 வது ஆண்டு பிறந்த நாளான 15.9.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க அலுவலகத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. அது சமயம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன். இவ்வாது தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

---

## கள்ளக்குறிச்சியில் கொடியேற்று விழா!

### எ.வ.வே. கம்பன் பங்கேற்பு!

கள்ளக்குறிச்சி,செப். 12:

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நுற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கள்ளக்குறிச்சி நகராட்சி 1வது வார்டு பகுதியில் புதிதாக கழக கொடி கம்பம் அமைக்கப்பட்டன,இதனையடுத்து நேற்று முன்தினம் கழக கொடியேற்று விழா மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு கள்ளக் குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ தலைமை வகித்தார்,வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம். எல்.ஏ, நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன்,நகர கழக செயலாளரும், நகர மன்ற தலைவருமான ஆர். சுப்ராயலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக இளைஞரணி துணை அமைப்பாளரும் நகராட்சி 1வது வார்டு கவுன்சிலருமான ரமேஷ் வரவேற்றார், இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராக கழக மாநில மருத்துவர் அணி துணைத் தலைவர் மருத்துவர் எ.வ.வே.கம்பன் கலந்து கொண்டு புதிதாக அமைக்கப்பட்ட கொடிக் கம்பத்தில் கழக கொடியேற்றி வைத்து கல்வெட்டை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் வார்டு செயலாளர் மாரியப்பன், மாவட்ட பிரதிநிதி செந்தில் குமார், மாவட்ட ஆதிதிராவிடர் நல குழு அமைப்பாளர் பழனிசாமி,நகர கழக துணை செயலாளர் நீதி அன்பு, நகர மன்ற கவுன்சிலர்கள் விஜயகுமாரி கலைச்செல்வன், செல்வம்,விமலா விஜய் மனோஜ், உமா வெங்கடேசன், நகர கழக நிர்வாகிகள் கருப்புத்துரை, வெங்கடேசன், சங்கர், சரத்குமார், ரமேஷ். குமார், ராமசாமி, குணசேகரன், சீத்தா ராமன், முத்துசாமி, ரமேஷ். மயில், எழிலரசன், காமராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், அனைத்துத்துறை சார்ந்த பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, முன்னிலையில் நேற்று முன்தினம் (10.09.2024) நடைபெற்றது. உடன் மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு. வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன் அவர்கள், தனி மாவட்ட வருவாய் அலுவலர் (காவிரிவைகைகுண்டாறு) திருமதி.ஆர். ரம்யாதேவி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.




# சிவகங்கையில் - அரசின் பல்வேறு திட்டப் பணிகளை - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு செய்த காட்சிகள்!




சிவகங்கை மாவட்டத்தில் ‘முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள்’ , மாவட்ட ஆய்வுக்கூட்டம், ‘கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்’ வழங்கும் விழா மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருகை தந்த போது, வழியெங்கும் திரண்டு வந்து உற்சாக வரவேற்பினை அளித்த கழகத்தினர் – இளைஞர் அணித் தம்பிமார்கள் – பொதுமக்கள் அனைவருக்கும் தமது அன்பையும், நன்றியையும் அமைச்சர் தெரிவித்துக் கொண்டார்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.09.2024) சிவகங்கை மாவட்ட விளையாட்டு அரங்கில் முதலமைச்சர் கோப்பை மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி. ஆர். தமிழரசி, எஸ். மாங்குடி, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆஷா அஜித், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விடுதலைப் போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலம் அவர்களின் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாட முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்கள். வாளுக்கு வேலி அம்பலத்தின் புகழ் மேலும் பரவிடும் வகையில், அவருக்கு திருவுருவச்சிலை யுடன் கூடிய மண்டபம் அமைக்கப்படும் என்றும் கழக அரசு சார்பில் அறிவிக்கப்பட்டது. காளையார்கோவில் அருகேயுள்ள நகரம்பட்டி கிராமத்தில் நடைபெற்று வரும் அப்பணியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் நேரில் ஆய்வு செய்தார். வாளுக்கு வேலி அம்பலத்தின் திருவுருவச்சிலைக்கான கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திட அதிகாரிகள் அலுவலர்களை அறிவுறுத்தினார்.




காரைக்குடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கான கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா – மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகளை வழங்கும் நிகழ்ச்சியின் போது, மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்தவர்கள், அவர்கள் உருவாக்கிய படைப்புகள் – உற்பத்தி பொருட்களைக் கொண்ட அரங்குகளை அமைத்து இருந்தனர். அந்த அரங்குகளுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்று, சுய உதவிக்குழுக்கள் தயாரித்த பொருட்களின் பயன்பாட்டினைக் கேட்டறிந்தார். அவர்களின் பணி சிறக்க வாழ்த்தினார்!




“முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய நூற்றாண்டை முன்னிட்டு சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு கலைஞர் நூலகத்தை இளைஞர் அணி சார்பில் திறக்க வேண்டும்” என்ற கழகத்தலைவர் – முதலமைச்சர் அவர்களின் உத்தரவை ஏற்று, திசையெங்கும் கலைஞர் நூலகங்கள் திறக்கப்பட்டு வருவதை காண்கிறோம்! அந்த வகையில், இளைஞர் அணி சார்பில், சிவகங்கை சட்டமன்றத் தொகுதிக்கான நூலகத்தை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் திறந்து வைத்தார். “பேசியும் – எழுதியும் வளர்ந்த நம் திராவிட இயக்கத்தின் வழியே வாசிப்புக்கு முக்கியத்துவம் அளித்து, திறந்து வைக்கப்பட்டுள்ள இந்நூலகம், எல்லோருடைய அறிவுத்தேடலுக்கும் துணை நிற்கட்டும். வாழ்த்துகள்!” என, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



அரசுத் துறையில் ஆய்வுகளே நல்ல தீர்வுகளுக்கு வழிவகுக்கும் என்பதன் அடிப்படையில் மாவட்டம் வாரியாக தொடர்ந்து, விரிவான ஆய்வுக் கூட்டங்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்தி வருகிறார். அந்த வகையில் சிவகங்கை மாவட்டத்தில் சென்றாண்டு ஆய்வுக்கூட்டம் நடத்திய நிலையில், மீண்டும் அனைத்து துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடத்தினார். அப்போது, மாவட்டத்தின் உட்கட்டமைப்பு சார்ந்து நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்தும், நம்முடைய அரசின் மக்கள் நலத்திட்டங்கள் எந்த அளவுக்கு பயனாளிகளை சென்று சேர்ந்துள்ளது என்பதற்கான தரவுகள் குறித்தும் உரிய ஆவணங்கள் வழியாக ஆய்வு செய்தார். அவை சார்ந்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அரசு அலுவலர்கள் உரிய பதில்களை தெரிவித்தனர். மேலும் மக்களுடன் முதல்வர் திட்டத்தின் பயனாளிகளுடன் செல்போன் மூலம் கலந்துரையாடி, அவர்களின் கருத்துகள் பெறப்பட்டது. எந்தவொரு திட்டமும் தங்குதடையின்றி மக்களுக்கு சென்றுசேர உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க அனைத்து அதிகாரிகள் – அலுவலர்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டுக் கொண்டார்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (10.09.2024) காரைக்குடியில் சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள 874 ஊராட்சிகளுக்கு 997 கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே. ஆர் பெரியகருப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர் எஸ். ராஜகண்ணப்பன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா காரைக்குடி மேயர் எஸ். முத்துதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். மாங்குடி, எஸ். முருகேசன், திருமதி. ஆர். தமிழரசி, சிவகங்கை மாவட்ட ஆட்சியர் திருமதி. ஆஷா அஜித், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாதரெட்டி, சர்வதேச செஸ் விளையாட்டு வீரர் பிரனேஷ், சர்வதேச டென்னிஸ் விளையாட்டு வீரர் நந்தகிஷோர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில், சிவகங்கை மாவட்டம் சிறாவயலில் ரூ.3 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் ‘காந்தி – ஜீவா’ நினைவு அரங்கத்திற்கான கட்டுமானப் பணிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார். இது தொடர்பான பதிவில் அமைச்சர் அவர்கள், “ மகாத்மா காந்தி அவர்களும் – பொதுவுடைமை இயக்கத் தலைவர் தோழர் ப.ஜீவானந்தம் அவர்களும் சந்தித்த சிறாவயலில், காந்தி – ஜீவா நினைவு அரங்கத்தை விரைவில் கட்டி முடித்திட அதிகாரிகள் – அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினோம்” என்று குறிப்பிட்டுள்ளார்.